திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் கோவில்பட்டிக்கு பக்கத்திலேயிருக்கின்ற கிராமப்புறங்களில் இருந்து பால் வாங்க மறுக்கிறார்கள். இதை அரசு அறியுமா? அப்படி அறியுமானால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தகவல் இல்லை. தனியாக வினா போட்டால் பதில் அளிக்கலாம்.

மதுரை அழகர் கோவிலிலுள்ள முன் மண்டபம்

622—(*வினா எண். 5434)—திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அழகர் கோவிலின் முன்பகுதியில் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் உள்ள மண்டபம் அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், இதனை பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் அழகர் கோயிலின் முன் பகுதியில் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள மண்டபம் தற்போது அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லை.

(ஆ) மேற்படி மண்டபத்தை மராமத்து செய்து பாதுகாக்க 1979-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரை அழகர் கோயில் முன் பகுதியிலுள்ள மண்டபத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்க ரூ. 5,000-க்கு (ரூபாய் ஐயாயிரத்துக்கு மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. மேலும் அபாயகரமாக உள்ள மண்டபத்தின் பகுதிகளைப் பிரித்து கட்டுவதற்காக ஆகும் செலவினம் குறித்தும் மதிப்பீட்டினைத் தயாரித்து அனுப்புமாறு தொல்பொருள் ஆய்வுத் துறை, மதுரை இளநிலைப் பொறியாளரிடம் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு கிடைக்கப்பெற்றவுடன் உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகவே அந்த கோபுரம் அந்த நிலையிலேதான் உள்ளது. நான் 2 வருடங்களுக்கு முன்பாக அங்கே சென்று பார்த்தேன். அப்படியே இருந்தது. இப்போது

கடந்த 2 மாதத்திற்கு முன்பும் பார்த்தேன். அப்படியே இருக்கிறது. எப்போது இந்தக் கடிதம் எழுதப்பட்டது, அதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்த்து உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கட்டடத்திலே உள்ள அபாயத்தைக் குறித்து விரைவில் மதுரை இளநிலைப் பொறியாளரிடம் மதிப்பீடு பெற்று கட்டுமானப் பணியினை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் ஊராட்சி அருள்மிகு தேனபுரீஸ்வரர் ஆலயம்.

623—(*வினா எண். 9238) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சட்டமன்ற தொகுதியில், மாடம்பாக்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு தேனபுரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள விக்கிரகங்கள் அண்மையில் களவாடப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடம்பாக்கம் அருள்மிகு தேனபுரீஸ்வரர் திருக்கோயில் பழமை வாய்ந்தது, தொன்மை வாய்ந்தது. அந்தக் கோயிலிலுள்ள சிலைகள் திருடப்பட்டதாக ஒரு பகுதியினரும், திருடப்படவில்லை என இன்னொரு பகுதியினரும் பிரச்சினையை உண்டுபண்ணி, இரண்டு வழக்குகள் இன்றைய தினம் அதுபற்றி நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற நிலையில் ஊர் அமைதி கெட்டிருக்கும் நிலையில், சிலை திருட்டு நடக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் இங்கே அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்தக் கோயிலுக்கு பல ஏக்கர் நிலங்கள் இருப்பதாக அறிகிறேன். அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது என்பதையும், அவை யார் யாரிடம் இருக்கிறது என்பதையும் அறிய விரும்புவதோடு, அற நிலையத் துறையின் மூலமாக தமிழகம் முழுமையும் இருக்கின்ற கோயில்களைப் பொறுத்தவரையிலும் கூட அதுபற்றிய விவரங்களைக் கண்டறிந்து அந்தந்த கோயில்